# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.23 |
| பெயர் | எம்.சக்திவேல் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 10th day of December 2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல், செம்மெஞ்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் நான் பி.5 சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இந்த வழக்கு கோப்பினை முந்தைய ஆய்வாளர் புலன் விசாரணை செய்து பின்னர் பணிமாறுதலில் சென்ற காரணத்தினால் கடந்த 29-06-2011 ஆம் தேதி நான் வழக்குக் கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகள் எனக்கு முன்பிருந்த ஆய்வாளரிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை. பின்னர் வழக்குக் கோப்பினை துணை இயக்குனர், குற்ற வழக்கு தொடர்பு துறை (DDP) யிடம் காண்பித்து சட்ட கருத்துரைப் பெற்று, 12-08-2011 ஆம் தேதி அன்று

இந்த வழக்கின் எதிரிகள் வெங்கடேஷ் என்கிற வெங்கிடசுப்பிரமணியம் மற்றும் மணி ஆகியோர்களுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச. ன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் காணாமல்போன ராஜுவின் வயது 58 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையில் ராஜுவின் வயதை நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வழக்கு சம்பவ காலத்தில் இறந்துபோன ராஜுவிற்கு திருமணம் ஆன ஒரு மகளும், திருமணம் ஆகாமல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மகளும் இருந்தார்கள் என்றால், சரிதான். காணாமல் போன ராஜுவைப் பற்றி செய்தி தாள்களில் விவரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால், எனக்கு முன்பிருந்த ஆய்வாளர்கள் அதைச் செய்தார்கள். ஆனால் அந்த செய்தி தாளின் விவரங்கள் கேஸ் டைரியில் தற்போது இல்லை. காணாமல் போன ராஜுவை ஒரு சேன்ட்ரோ காரில் கடத்தியதாக நான் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அந்த காரை நாங்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அதன் உரிமையாளரை நான் விசாரித்தேனா என்றால், அ.த.சா.15 கமலக்கண்ணன் அவர்கள் காரின் உரிமையாளர் இந்த வழக்கின் முதலாவது எதிரி வெங்கடசுப்பிரமணியன் என்று கூறியுள்ளார். ராஜுவின் மனைவி தமிழச்சி பெயரில் நிலம் இருந்தது என்று காட்டுவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் வயது 30 ஆக கூறப்பட்டுள்ளது என்றால், அதில் அவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்த வழக்கில் அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மருத்துவரின் இறுதி கருத்துரையிலும் இறந்துபோனதாகச் சொல்லப்படும் நபர் 30 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். காணாமல் போன ராஜுவை நாங்கள் கண்டுபிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காணாமல் போன ராஜுவும், அவினாசி பரமசிவம்பாளையத்தில் கண்டு எடுக்கப்பட்ட சடலமும் வெவ்வேறான நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறான ஒரு வழக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/எம்.சக்திவேல்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.